ஆணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு 150 புறநோயாளிகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

154—

துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***49587—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டம், அரசூர் துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், அரசூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தில் 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட 2 மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. அந்தப் பகுதியின் உச்ச மின்பளுத் தேவை 9.2 எம்.வி.ஏ. ஆகும். அரசூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், பெருகி வரும் மின் பளுவைக் கருத்திற்கொண்டு, அங்கு இயங்கி வரும் 2X5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றிகளுடன், 2X8 எம்.வி.ஏ. திறன்கொண்ட 2 மின்மாற்றிகளைக் கூடுதலாக

2015 ஆகஸ்ட் 27]

அமைப்பதற்கு நிருவாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மின்மாற்றிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் முடிக்கப்படும். எனவே, சீர்காழி வட்டம், அரசூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, திரும்பும் திசையெல்லாம் தெய்வமாய் நிற்பவரே! காணும் இடமெல்லாம் கருணை மழை பொழிபவரே! தேசமே பெரிதென தெளிவு மனம் கொண்டவரே! எண்ணில்லா மொழி தெரிந்தவரே! ஏழைகளின் வலி அறிந்தவரே! (மேசையைத் தட்டும் ஒலி) தாயுருவில் அவதரித்த தமிழர் குல சாமியே! தமிழினத்தை வாழ வைக்கும் தன்னிகரில்லாத் தலைவியே! விண்ணும் மண்ணும் வியக்கும் வீர காவியமே! ஈகைக்கும் வாகைக்கும் இலக்கணமே! ஈடில்லா வெற்றிகளின் இருப்பிடமே! மகளிருக்கு மகத்தான சஞ்சீவித் திட்டம் தந்த மாதர் குல மாணிக்கமே! (மேசையைத் தட்டும் ஒலி) பூமிக்கு வந்த எங்கள் பூலோக தெய்வமே! ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் ஒரே ஒரு மணி நேரம் பிரச்சாரம் செய்து 1½ இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) உலக கின்னஸ் சாதனை படைத்த மக்கள் திலகம் தந்த எங்கள் சொக்கத் தங்கம், நான் அனுதினமும் வணங்கும் கடவுள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தெய்வீகத் திருவடிகளை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, வடக்குப் பகுதியில் அதிகமான கிராமங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், எருக்கூர் நவீன அரிசி ஆலை, புத்தூர் சீனிவாசா சுப்புராயா தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆகியவை இருக்கின்றன. எனவே, மழைக் காலங்களில் ஏற்படும் சேதத்தினால் மின்சாரம் தடையில்லாமல் கிடைக்க அரசூர் 33/11 கே.வி. துணை மின்

நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி வட்டம், அரசூர் பகுதியில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. அதில் 2X5 திறன் கொண்ட மின்மாற்றிகள், அதாவது 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியின் மின் பளுத் தேவை 9.2 எம்.வி.ஏ.தான். தேவைக்கு அதிகமாகவே மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. மின் பளு குறைவாகத்தான் இருக்கிறது. 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி இயங்கும் பகுதியில் மின் பளுத் தேவை 9.2 எம்.வி.ஏ. ஆக இருந்தபோதிலும், பெருகி வரும் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், தொலைநோக்குப் பார்வையோடு அங்கு 2X8 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகள் தற்போது நிறுவப்படவுள்ளன.*

முற்பகல் 10-30

16 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றிகள் கொண்ட துணை மின் நிலையமாக தற்போது இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துகின்றபோது, அங்கே இருக்கிற 9.2 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் பளுவிற்குப் போதுமானதாகும். இந்த நேரத்தில் ஒன்றை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற கேள்விகளைக் கேட்கும்போது, தொழில்நுட்ப ரீதியாக விஷயங்களைத் தெரிந்து கொண்டால், கேள்விகளைக் கேட்பதற்கு உதவியாக இருக்கும் அல்லது அங்கிருக்கும் பிரச்சினைகளை அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

33/11 அல்லது 33/22 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகவோ 33/22 கே.வி. ஆகவோ அல்லது 230/11 கே.வி. ஆகவோ அல்லது 400/11 கே.வி. ஆகவோ

மாற்றினால்தான் மின்சாரம் வரும் என்று அர்த்தமல்ல. அங்கே இருக்கின்ற 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலேயே உங்கள் பகுதியின் மின் பளு எவ்வளவு? அந்தப் பளுவிற்கு ஏற்ப மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? உதாரணத்திற்கு, 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட 2 மின்மாற்றிகள் அமைக்கின்றபோது, அதாவது 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளாக மாற்றி அமைக்கும்போது, 33 எம்.வி.ஏ. திறன் வந்துவிடுகிறது. 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலேயே அந்தத் திறன் வந்துவிடும். எந்த sub-station அமைக்கப்பட்டாலும், அங்கு வருகின்ற மின்சாரத்தின் அளவு அவ்வளவுதான். எப்பொழுது அதனை 110 கே.வி. ஆக மாற்ற வேண்டியிருக்குமென்றால், 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலே, 32 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிக்கு மேல் மின் பளு இருந்தால்தான் மாற்றுவார்கள். நான் மீண்டும் சொல்கிறேன், 32 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளுக்கு மேலாக அந்தப் பகுதியில் மின் பளு அதிகரித்தால்தான், 110 கே.வி. துணை மின் நிலையமாக மாற்ற வேண்டியிருக்கும். நீங்கள் கேட்கின்ற கூடுதல் மின் பளுவை எதிர்கொள்வதற்கு 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலேயே நாம் தேவையைப் பூர்த்தி செய்துவிட முடியும். Power transformers என்று சொல்வார்கள். Transformer என்று சொல்லும்போது இந்த transformer இல்லை, Transformer-ல் 2 வகைகள் இருக்கின்றன. ஒன்று power transformer, மற்றொன்று, distribution transformer, அதாவது விநியோக transformer. அங்கே கூடுதலாக தேவை ஏற்படுகின்றபோது துணை மின் நிலையங்களில் இருக்கும் மின்மாற்றியைத் தரம் உயர்த்திவிட்டாலே அங்கே இருக்கின்ற தேவை பூர்த்தியாகிவிடும். 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலே மின்மாற்றியின் திறனைக் கூட்டினால், தேவை நிறைவடைந்து விடும் அல்லது 110 கே.வி. துணை மின் நிலையத்தில் பற்றாக்குறையிருந்தால், மின்மாற்றியின் திறனை அதிகப்படுத்தினாலும் அந்தத் தேவை நிறைவடைந்துவிடும். ஆகவே, 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றித்தான் தேவையை நிறைவேற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. அங்கேயிருக்கின்ற 33/11 கே.வி. துணை மின் நிலையத்தையே தரம் உயர்த்தி, கூடுதலாக 2 மின்மாற்றிகளை அவற்றிலேயே அமைத்துவிட்டால், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்துவிடலாம். அந்தப் பகுதியில் கூடுதல் மின் பளு உள்ளது. அதற்கு 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட

மின்மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட இருக்கின்றன. அதாவது 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட இருக்கின்றன. அவ்வாறு புதிதாக அமைக்கப்படும்போது, அங்கு தேவைக்கு மேலாகவே மின்திறன் வசதி செய்யப்படவிருக்கிறது. எனவே, அதனை 110/11 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றினால்தான் தேவை நிறைவு செய்யப்படும் என்று தவறாகப் புரிந்துகொண்டதன் விளைவாக இத்தகைய கேள்விகள் அடிக்கடி இம்மாமன்றத்தில் எழுப்பப்படுகின்றன என்பதற்காகத்தான் இதை இவ்வளவு விரிவாகச் சொல்கிறேன்.

உங்கள் பகுதி மின்சார வாரிய அதிகாரியிடத்தில் கேளுங்கள். உங்கள் பகுதியில் எவ்வளவு மின் பளு இருக்கிறது? அங்கு இருக்கக்கூடிய மின்மாற்றியின் திறன் எவ்வளவு? அந்தத் திறன் எவ்வளவு என்று தெரிந்துகொண்டாலே உங்கள் பிரச்சினை தீர்ந்துவிடும். அவ்வாறு திறன் பற்றாக்குறையென்றால், துணை மின் நிலையத்தையே மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அங்கு கூடுதலாக ஒரு power transformer அமைத்தால் போதுமானதாகும். இவையனைத்தையும் உங்கள் தேவை நிறைவடைய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கின்றேனே தவிர, வேறொன்றுமில்லை. உங்கள் பகுதியின் மின் தேவை, கூடுதல் மின்மாற்றிகள் நிறுவப்படுவதன்மூலம் நிறைவடைவதால், அங்கு புதியதாக 110/11 கே.வி. துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

155—

தொழிற்பயிற்சி நிலையம்

***51827—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—